**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 17.09.2025**
**OS. No. 105/2020**
**வழக்கு சாட்சி PW.1–லெனின்குமார் , த/பெ.அமரப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடச்சி:</u>**

33) நான் பிரதிவாதிகளுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தபடி பிரதிவாதிகள் சேலத்தை சேர்ந்து ராமமூர்த்தி, வெங்கடேசன், கண்ணன் ஆகியோர்களிடம் கடந்த 18.04.2012 ம் தேதியில் 14 வீட்டு மனைகளாக பிரித்து 15190 சதுரடி சம்மந்தமாக சுவாதீனத்துடன் கூடிய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. அந்த பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் இல்லை. நான் சாட்சி கையொப்பம் செய்து விட்டு தற்போது பொய்யாக இல்லை என்று தெரிவிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்கண்ட மூவரும் சேர்ந்து பிரதிவாதிகளும், எனக்கும் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார்கள் என்றும், அதை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்றால் சரியான நினைவில்லை.

34) மேற்கண்ட மூவரும் நீதிமன்றத்தில் கேவியட் மனு தாக்கல் செய்த அதன் நகலை நான் தபால் மூலம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் மேற்கண்ட அறிவிப்புகளை பெற்றுக்கொண்டும் அவர்களுக்கு ஒப்பந்தபடி கிரையம் செய்து கொடுக்கும் படி மாண்புமிகு மேட்டூர் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் அ.வ.எண்.280/2024 என்ற வழக்கை என் மீதும், பிரதிவாதிகள் மீதும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அவ்வாறு வழக்கு மட்டும் தாக்கல் செய்துள்ளார்கள். நான் அதற்கு பின்பும் மேற்கண்ட மூவரையும் இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவேண்டும் என்று எந்த மனுவும் தாக்ல செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விவரங்கள் குறித்தும் கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

35) மேற்கண்ட மூவரும் தான் தாவா சொத்தான 14 வீட்டுமனைகளின் சுவாதீனத்தில் உள்ளார்கள் என்றால் சரியல்ல. நானும், என் தந்தையும் சேர்ந்து 1, 2 பிரதிவாதிகளுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் 1ம் பிரதிவாதியுடன் மட்டும் ஏற்படுத்தியுள்ளோம். அதன்பிறகு நானும், என் மனைவியும் சேர்ந்து 2வதாக 1, 2 பிரதிவாதிகளுடன் ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி இரண்டு ஒப்பந்த பத்திரங்களிலும் தரகு ஒப்பந்தம், கமிஷன் ஒப்பந்தம், இடைதரகர் ஒப்பந்தம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான், கிரைய ஒப்பந்தம் என்றும் குறிப்பிடவில்லை. மேற்கண்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில் பிரதிவாதிகள் நிலங்களை மனை நிலங்களாக பிரித்து விற்பனை செய்வதற்காக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்திவிட்டார்கள் என்றும், அதை மறைத்து இந்த வழக்கிற்காக தரகு ஒப்பந்தம் என்று வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல, மனையாக பிரித்தது நான் தான்.

36) பிரதிவாதிகளிடம் ரூ.1,78,70,900/–ஐ நான் பெற்றுள்ளேன் என்றும், மேற்கண்ட இரு ஒப்பந்தங்களின் அடிப்படையில் ரூ.67,40,000/– மட்டும் தான் பிரதிவாதிகளிடம் இருந்து எனக்கு சேர வேண்டிய பாக்கி தொகை என்றால் சரியல்ல, பிரதிவாதிகள் வெறும கமிஷன் ஏஜண்டுகள் மட்டும் தான், 1.4 ஏக்கர் நிலத்தை விற்றவர்களிடம் இருந்து மேற்கண்ட ரூ.1,78,70,900/–ஐ பிரதிவாதிகள் வாங்கி கொடுத்தார்கள். பிரதிவாதிகளிடம் நான் ஏற்கனவே ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தப்படி சொத்துக்களை 196 வீட்டுமனைகாள பிரித்து அதில் ஒரு பகுதியை விற்றுவிட்டாகள் என்றும், மீதி பகுதியை விற்பனை செய்வதற்காக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும், அதை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

37) தாவா சொத்து தற்போது வீட்டு மனைகளாத்தான் உள்ளது என்றும், ஒரு பகுதி விவசாய நிலமாக உள்ளதாகவும், அதை என் மச்சினன் பார்த்துக்கொள்வதாக நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் தற்போது நிலையில் எவ்வாறு உள்ளது என்று காண்பிப்பதற்கு புகைப்படம் ஏதேனும் தாக்்ல செய்துள்ளேனா என்றால் இல்லை, அவ்வாறு தாக்கல் செய்தால் வீட்டு மனைகளாக உள்ள விவரம் தெரிந்துவிடும் என்பதற்காகத்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

மேற்கண்ட சங்கதிகளை மறைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/—திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.